**புலமைச சொத்துக்கான நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புலமைச் சொத்துக்கான நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர, நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பான எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு முகவராண்மையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் முகவராண்மையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க முகவராண்மை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

-----------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

-----------------------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல், தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல், மற்றும் சொத்துக்களுக்கான கணக்களிப் பொறுப்பினைப் பேணுதல் முகாமைத்துவத்தின் பொது மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்காக கணக்களிப் பொறுப்பினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது இணக்கம் செய்தல், மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்படுத்திலினைப் பெற்றுக்கொள்வதற்குப் போதியளவு ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிதியத்தினால் பேணுதல் அவசியமாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திசெம்பர் மாதம் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு அமைவாக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,408,088 அங்கீகரிக்கப்பட்ட செலவினமாக மீளாய்வாண்டு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்வரும் வருடம் கணக்கு தயாரிக்கப்படும் போது கணக்கீட்டு பிழையினை திருத்தும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருடத்தினுள் செலவிடப்படும் சகல செலவினங்களும் சம்பந்தப்பட்ட வருடத்தினுள் கணக்கிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வருடத்தின் தேய்மானமாக ரூபா 214,023 கூடுதலாக கணக்கிலிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். 2020 வருடம் கணக்கு தயாரிக்கப்படும் போது இக்கணக்கீட்டு பிறழினை திருத்தும் படி கணக்காளரிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தேய்மானத்தின் சரியான பெறுமதியினை கணக்கிலிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 87,006,250 மிகையாக இருந்ததுடன் அதற்கிணையாக சென்ற ஆண்டில் மிகை ரூபா 91,523,739 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா 4,517,489 க்கான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவுக்கு வர்த்தக சின்னத்திற்கான வருமானம் ரூபா 2,835,907 ஆக குறைவடைந்தமை மற்றும் வழங்கல் மற்றும் பாவனைப் பொருட்களின் செலவு ரூபா 3,113,387 வினைால் அதிகரித்தமை முக்கிய காரணிகளாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வர்த்தக சின்னங்களை பதிவு செய்தல் | | |
| (i) | மீளாய்வாண்டு ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்னங்களின் எண்ணிக்கை 14,993 ஆக இருந்ததுடன் அதனுள், 1976 முதல் 2008 வரை கிடைக்கப் பெற்ற விண்ணப்பப் பத்திரங்கள் | ஏற்றுக் கொள்கின்றேன். விண்ணப்பப் பத்திரத்தின் பால் கவனம் செலுத்தும் போது பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய கட்டாய கால எல்லையின் தாக்கம் ஏற்படல், விண்ணப்ப | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் செற்படுகளை துரிதப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2091 ஆகும். அதன்படி வர்த்தக சின்னங்களை பதிவு செய்வதற்காக 11 முதல் 43 வருடங்கள் வரையிலான காலம் சென்றிருந்தது. பதிவினை செல்லுபடியாகும் திகதி, ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப் பிக்கப்பட்ட திகதியாவதுடன் வர்த்தக சின்னமொன்று 10 வருட காலம் வரையில் செல்லுபடியாகும் அதன் படி 2009 க்கு முன்னர் கிடைக்கப் பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கான பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும் சந்தர்ப்பத்தின் பொழுது 10 வருட செல்லுபடியாகும் கால எல்லையும் முடிவடைந்து இருந்தது. | தாரரின் தரப்பில் ஏற்படும் தாமதம், முன்வைக்கப்படும் ஆட்சேபனைகளுக்கான பரீட்சிப்பு, நீதிமன்றங்களில் தொடரப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சின்னத்தின் உறுத்தினை ஏனைய தரப்பினருக்கு பெற்றுக் கொடுத்தல் ஆகிய காரணிகள் ஆகும். | |
| (ii) | மீளாய்வு ஆண்டில் வர்த்தக சின்னங்களுக்கான 10,385 விண்ணப்பப்பத்திரங்கள் கிடைத்திருந்ததுடன் அவ்விண்ணப்ப பத்திரங்களில் 4612 களினது பரீட்சிப்பு வேலைகள் ஆரம்பிக்கப் பட்டிருந்ததுடன் எந்தவொரு விண்ணப்பப் பத்திரமும் பதிவுக்காக முன்வைக்கப் பட்டிருக்கவில்லை. முன்னைய வருடங்களில் ஏற்பட்டிருந்த தாமதம் காரணமாக அவ்வருடங்கில் பெறப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பாக இவ்வருடத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றேன். ஆரம்ப கட்ட பரீட்சிப்பு மற்றும் இரண்டாம் கட்ட பரீட்சிப்பு அறிக்கைகள் யாவும் உதவிப் பணிப்பாளர் இருவர் மூலம் மாத்திரம் அங்கீகாரத்திற்கான கவனம் செலுத்தப்படுதல் மற்றும் முன்னைய வருடங்களில் கோவைப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுக்காக முன்னுரிமை வழங்கப்படுதல் இதற்கான காரணிகளாகும். | வர்த்தக சின்ன பதிவினை துரிதப்படுத்துவதுடன் விண்ணப்ப தாரர்களுக்குரிய சேவையினை வழங்குவதை துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (iii) | மீளாய்வு ஆண்டின் ஆரம்பத்தில் பரீட்சிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப் படாத மொத்த விண்ணப்ப பத்திரங்களின் எண்ணிக்கை 6746 என முன்வைக்கப் பட்டுள்ள அறிக்கையின்படி அவதானிக்கப்படுவதுடன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு அவ் எண்ணிக்கை 6713 ஆக | ஏற்றுக் கொள்கின்றேன். வருட இறுதியில் பரீட்சிப்பு செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாத விண்ணப்ப பத்திரங்களின் எண்ணிக்கை 6713 ஆக இருந்தது. | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் இற்றைப் படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. முன்னைய வருடங்களில் ஏற்பட்ட தாமதங்கள் தொடர்ந்தும் ஏற்பட்டமை இதற்கான காரணமாக அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | மீளாய்வு வருடம் இறுதி கட்டத்தில் 1994 ஆம் வருடம் முதல் கொண்டு பல்வேறு வருடங்களில் வர்த்தமானியில் பல்வேறு வருடங்களில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிராத எண்ணிக்கை 4344 ஆகவும், 1987 வருடம் முதல் பல்வேறு வருடங்களில் பதிவும் கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கப்படாத எண்ணிக்கை 3193 ஆகும். | ஏற்றுக் கொள்கின்றேன். விண்ணப்பதாரரின் தரப்பில் சம்பந்தப்பட்ட கட்டணத்தினை செலுத்தப்படாத தாமதங்கள் நேர்ந்துள்ளன. 2019 வருடத்தினுள் செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் மூலம் கைதவறிப் போன பொறுப்புக்கள் குறைக்கப்பட்டுள்ளன. | வர்த்தக சின்னங்களை பதிவு செய்யும் செயற்பாடுகள் இற்றைப் படுத்தப்பட வேண்டும். |
| (v) | வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் பிரசுரிக்கப்பட்டிராத சின்னம் மாதிரி ஒன்றினை (10) பரீட்சிக்கும் போது கட்டணம் செலுத்தப்பட்ட பின்னரான தாமதக் காலம் 01 வருடம் முதல் 10 வருடத்திற்கான கால வீச்சினை கொண்டிருந்தது. கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வர்த்தமானியில் பிரசுரிப்பது தொடர்பாக நாட் குறிப்புக்களை தயாரித்தல் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களை தயாரிக்க நேர்ந்தமைக்கான தாமதங்கள் இவைகளுக்கு காரணிகளாக அமைந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன். அறிவுசார் சொத்துக்கான அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அறிவுசார் சொத்துக்கான பணிப்பாளர் தலைமை அதிபதியினை எதிர் மனுதாரராக ஆக்கப்பட்டு நீதிமன்றில் சட்ட | - மேற்படி - |
| (ஆ) | புதுக் கண்டுபிடிப்புக்களுக்கான பேடன்ட் உரிமைப் பத்திரத்தினை பதிவு செய்தல்<br>------------------------------------------------ | | |
| (i) | மீளாய்வு ஆண்டினுள் பதிவு செய்யப்பட்ட பேடன்ட் உரிமைப் பத்திரங்களின் | சரியானதே. பேடன்ட் உரிமைப் பத்திரம் ஒன்றினை | பேடன்ட் உரிமைப் பத்திரங்கள் வழங்கும் |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 175 ஆனதுடன் அவை 2006 முதற் கொண்டு 2018 வரையிலான வருடங்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களாகும். அதன்படி இப்பேடன்ட் உரிமைப் பத்திரங்களை பதிவு செய்வதற்கு 01 முதல் 13 வருட காலங்கள் கழிந்து இருந்தன. நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட 10 பேடன்ட் பரிசோதகர் பதவிகள் இருப்பதுடன் அவைகளில் 09 பதவிகள் வெற்றிடங்களாக உள்ளன. இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பரீட்சை நடாத்தப்பட்டு தகுதி வாய்ந்தவர்களை சேர்த்துக் கொள்வதற்கான செயற்பாடுகள் இதுவரை முடிக்கப்பட்டு இல்லாமை மற்றும் முன்னைய வருடங்கில் பேடன்ட் உரிமைப் பத்திர பதிவுகள் தாமதப்பட்டதன் காரணமாக கடிதக் கோப்புக்கள் குவிந்து இருந்தமையும் முக்கிய காரணியாக இருந்தது. | வழங்கப்படுவதற்கு முன்னர் பற்பல கட்டங்கள் பரீட்சிக்கப்படும், ஆகையினால் ஒரு குறிப்பிட்ட காலம் செலவாகும். அதுபோன்றே, பேடன்ட் பரிசோதகர்களாக புது விஞ்ஞான பட்டதாரிகளை ஆட்சேர்ப்புக்கான செயற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கின்றன. மேலும், சரியாக கோவைப்படுத்தலுக்கு தேவையான ஒத்துழைப்பினை இலங்கை புது கண்டுபிடிப்புக்கான அதிகார சபையினால் பெற்றுக்கொடுக்கும் படி அவர்களை அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக பயிற்சிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இச்செயற்பாடுகளை சாத்தியமாக செய்து முடிப்பதற்கு இயலாது போய் உள்ளது. | செயற்பாடுகளை இற்றைப் படுத்தப்பட வேண்டும். |
| (ii) | அதிகார சட்டத்தின் 83(2) பிரிவின் பிரகாரம் பேடன்ட் உரிமைப் பத்திரம் ஒன்றினை வழங்கப்படும் திகதியிலிருந்து இரண்டாவது வருடம் முடிவுற்றதன் பின் அதனை வலுவூட்டலுடன் வைத்துக் கொள்வதற்கு இரண்டாம் வருடம் மற்றும் பேடன்ட் உரிமைப் பத்திரங்கள் செல்லுபடியாகும் கால எல்லையினுள் ஒவ்வொரு பதில் வருடமும் காலாவதியாகும் தினத்திற்கு 12 மாதங்களுக்கு முன்னர் உரிய வருடாந்தக் கட்டணத்தை அவரால் செலுத்தப்பட வேண்டும். ஆயினும், 2019 சனவரி 01 திகதிக்கு உள்ளவாறு பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த பேடன்ட் உரிமைப் | சரியானதே. புதுக் கண்டு பிடிப்புக்களை வர்த்தக மயப்படுத்துவதில் உள்ள கஷ்ட நிலையினை கவனத்திற் கொண்டு ஒரு சில வருடங்கள் கட்டணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருந்த போதிலும் உரிய மிகை கட்டணத்தினை செலுத்தி உரிமைப் பத்திரத்தினை புதுப்பித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் சான்றிதழ்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இவ்வாறாக செயல் படுவதற்கு சட்டமா | பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தலுக்கான செயற்பாடுகள் தொடர்பாக சான்றிதழ் தாரிகளே அறிவுறுத்தும் வேலைத் திட்டங்களை அமுல் செய்வது உசிதமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | பத்திரங்களின் எண்ணிக்கை 4831 ஆக இருந்த போதிலும் 2019 வருடம் பேடன்ட் உரிமைப் பத்திரங்கள் 439 மாத்திரம் புதுப்பித்தல் செய்யப்பட்டிருந்தன. பேடன்ட் சான்றிதழ்தாரிகளுக்கு புதுக் கண்டுபிடிப்புக்களை வர்த்தக மயப்படுத்துவதில் உள்ள கஷ்டநிலை இதற்கு காரணீயாக உள்ளது. | அதிபர் கருத்தினையும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | கைத்தொழில் திட்டங்கள் | | |
| (i) | மீளாய்வாண்டினுள் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 258 ஆகும். அவை 2012 முதல் 2019 வருடம் வரையிலான காலத்தினுள் கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் ஆகும். அதன் படி இவ்விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கு 06 மாதம் முதற்கொண்டு 07 வருட காலங்கள் கழிந்து இருந்தன. விண்ணப்பதாரிகளுக்கு குறைபாடுகளை பற்றி அறிவுறுத்தி அனுப்புவதற்கு காலதாமதம் ஆனதும் மற்றும் அவை பற்றி பின் தேடிப்பார்த்தல் தாமதமானதும் இதற்கான காரணிகள் ஆகும். | சரியானதே. 2012 வருடம் கிடைக்கப் பெற்ற கைத்தொழில் திட்ட விண்ணப்பப் பத்திரத்தினை அதில் இருந்த குறைபாட்டின் காரணமாக அக்குறையினை சுட்டிக் காட்டப்பட்டு திருத்தும் படி விண்ணப்பதாரரை அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி அக் கைத்தொழில் திட்டத்தினை 2019.07.30 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டது. | கைத்தொழில் திட்டங்களை பதிவு செய்யும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் செய்தல் வேண்டும். |
| (ii) | அதிகார சட்டத்தின் 46(3) பிரகாரம் கைத்தொழில் திட்டங்களின்பதிவினை புதுப்பித்தல் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய உள்ள போதிலும் வருடத்தினுள் புதுப்பிக்கப்பட்ட 157 கைத்தொழில் திட்டங்கள் பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாது இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கைத்தொழில் திட்டங்களின் பதிவினை புதுப்பித்தல் தொடர்பாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான காரியங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |